**வெலிகம நகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 15 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிகம நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திரண்ட நிதி மற்றும் மிகையும் பற்றாக்குறையும் கணக்குகளில் செம்மையாக்கப்பட்டு ரூபா 979,793 ஆன கடன்கொடுனர் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டதனால் மீளாய்வாண்டில் செலவினம் சம அளவில் குறைத்து காட்டப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டில் 10 மாதங்களுக்கான முத்திரைக் கட்டணம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 திகதிக்கு கழிவு பொருட்கள் முகாமை கருத்திட்டத்திற்கு சொந்தமான 21 மாடுகள், 05 ஆடுகள் மற்றும் 640 கோழிகள் உள்ளடங்கிய மிருகவளத்தின் பெறுமதி கால் நடை இருப்பாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 47,317,344 ஆன 13 வாகனங்களின் பெறுமதி ஐந்தொகையில் மோட்டார் வண்டி மற்றும் மாட்டு வண்டியின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவை தொடர்பான துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையில் கூட்டுத்தொகை ரூபா 2,401,840 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் 3 வருட காலத்தை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 5,618,179 கடன்படுனர் மீதி நிலவிய போதிலும், அவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் 3 வருட காலத்தை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 75,977,802 ஆன கடன்கொடுனர் மீதி நிலவிய போதிலும், அவை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 5 வருட காலத்தை விஞ்சிய ரூபா 9,252,495 ஆன வைப்பு மீதிகள் மற்றும் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் நிலவுகின்ற கூட்டுத்தொகை ரூபா 6,097,007 ஆன 06 கணக்கு மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்தம் ரூபா 88,707,407 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பான நாளாதுவரையாக மற்றும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்து பதிவேடும், வருடாந்த பண்டகக் கணிப்பீட்டு அறிக்கையும், ரூபா 18,547,865 பொது பண்டக சாலை மற்றும் ஆயுர்வேத இருப்பு தொடர்பான பட்டோலையும் களஞ்சிய கணிப்பீட்டு அறிக்கையும், ரூபா 77,928,076 ஆன செலவின கடன்கொடுனர் மீதி தொடர்பான பட்டோலையும் முறையான கடன்கொடுனர் பதிவேடும், கூட்டுமொத்தம் ரூபா 39,916,515 ஆன கடன் தொடர்பான கடன் பதிவேடும் மீதிகள் உறுதிபடுத்தலும், ரூபா 14,633,987 ஆன செலுத்த வேண்டிய வைப்பு தொடர்பான நாளாதுவரையாக மற்றும் முறையாக பேணப்பட்ட வைப்பு பதிவேடு மற்றும் பட்டோலையும், ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்வதற்கு இயலாமலிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமானக் கோவையில் 261 (3) பிரமானத்திற்கு முறனாக 04 நடைமுறை வங்கி கணக்குகளில் போதியளவு பண மீதி இல்லாத போதும் கூட்டுமொத்தம் 3,500,576 ஆன காசோலைகள் பிரப்பிக்கப்பட்டடிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 159,912 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் குறைந்த வருமானம் ரூபா 2,728,198 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,888,110 ஆன வளர்ச்சி காணப்பட்டது

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீண்டுவரும் வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவினமிடையிலான விகிதம்

மீளாய்வாண்டில் மீண்டுவரும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினம் 99.8 சதவீதம் அளவு உயர் தரத்தில் நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் வருமான உதவி மற்றும் மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **வருடம்** | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2015** | 109,090,520 | 58,645,730 | 50,444,790 | 108,930,608 | (58,485,818) |
| **2014** | 94,470,320 | 37,674,386 | 56,795,934 | 97,198,517 | (40,402,583) |
| **2013** | 88,423,077 | 28,620,894 | 59,802,183 | 88,742,599 | (28,940,416) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு உள்ளிட்ட மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் வருமான உதவியில் அதிகரிப்பு மற்றும் முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சுய சம்பாதிப்பு வருமானத்தில் ரூபா 6,351,144 குறைவு ஆனது.

(ii) ஒவ்வொரு வருடத்திளும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்து இருந்த போதிலும், செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்திற்கு மேலாக மூன்று வருடங்களுக்குள் கனிசமான உயர் பெருமானத்தில் மீண்டுவரும் செலவு அதிகரித்து இருந்த போதிலும், மீளாய்வாண்டின் அப் பெறுமானம் சுய சம்பாதிப்பு வருமானத்தை ரூபா 8 மில்லியனால் விஞ்சி இருந்தது.

(iv) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(v) மேல் இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி நிலைமை தொடர்பில் சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 செயற்பாட்டு மூலதன முகாமை

2014 ஆண்டில் ரூபா 18,315,757 இழிவுப் பெறுமானமுடைய செயற்பாட்டு மூலதனம் 2015 ஆண்டில் ரூபா 16,067,526 ஆன இழிவுப் பெறுமானமாக இருந்தது. இழிவுப் பெறுமானம் ரூபா 2,248,231 இனால் குறைந்திருந்ததுடன் நடைமுறை பொறுப்புக்களை தீர்த்துக்கொள்ள போதியளவு நடைமுறை சொத்துக்கள் காணப்படாமை நிதி முகாமை ரீதியாக எதிரிடையான நிலைமையாகும் என அவதானிக்கப்பட்டன.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வீத வரி

நகர சபை அதிகாரச்சட்டத்தின் 170(1) மற்றும் (2) பிரிவுகள் பிரகாரம் நிலுவை வீத வரி அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீத வரி மீதி ரூபா 5,426,648 ஆக இருந்தது.

### 2.4.2 வாடகை

வருட ஆரம்பத்தில் உள்ள ரூபா 1,533,204 ஆன நிலுவை மீதிகளின் எவ்வித தொகையும் ஆண்டினுள் அறவிடப்படாமல் இருந்ததுடன், நிலுவை மீதிகள் அறவிடல் தொடர்பாக நகர சபை அதிகாரச்சட்டத்தின் 170(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 விடுதி வாடகை

முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலுவையாக நிலவும் ரூபா 807,510 ஆன விடுதி வாடகை அறவிடலுக்கு மீளாய்வாண்டிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 87,600 வும் முத்திரைக் கட்டணமாக ரூபா 2,910,900 பெறவேண்டியதாக உள்ளது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலுவை கடைஅறை வாடகை மற்றும் பெறுனர் வாடகை

ஓராண்டையும் விஞ்சிய காலத்திலிருந்து அறவிடப்படாது நிலவும் ரூபா 2.718,534 உள்ளிட்ட மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடைஅறை வாடகை, நிலுவையான பெறுனர் வாடகை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,030,246 ஆன போதும், நிலுவை வாடகை அறவிடல் தொடர்பாக சபை மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணிப்பீட்டு சபை சிபாரிசுகளை செயற்படுத்துதல்

பராதீனம் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 02 வாகனங்கள் மற்றும் மேலும் 03 வாகனங்கள் உள்ளடங்களாக 05 வாகனங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் நிலவிய 49 மிகை ஊழியர் எண்ணிக்கையை முறையாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நாற் சம்பளத்திற்காக நியமிக்கப்பட்ட 15 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் சம்பளமும் கொடுப்பணவுகளும் செலுத்துவதற்கு சபை நிதியத்தினால் ரூபா 2,071,784 ஆன செலவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டு திறமையின்மை**

சுபை அதிகார எல்லைக்குல் செய்யப்பட்ட அநுமதியற்ற நிர்மானங்கள்

அநுமதியற்ற நிர்மானங்கள் தொடர்பாக 1982 இன் 04 ஆம் இலக்க மற்றும் 1984 இன் 44 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களினால் சீர்திருத்தப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 28(3) பிரிவின் பிரகாரம் செயற்பட்டு தேவையான சட்டரீதியான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 இனங்கானப்பட்ட நட்டங்கள்**

நிருவப்பட்ட நோக்கிற்கு மாற்றமாக செயற்பட்டுக்கொண்டிருந்த ரன்பொஹொனிய விற்பனை நிலையத்தின் மீளாய்வான்டிட்கான வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 7,183,970 ஆனதுடன், அது சபையின் மொத்த வருமானத்தில் 33 சதவீதமான பெறுமானத்தை ெற்றிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள ஓர் செலவின விடயத்தின் மதிப்பிடப்பட்ட எல்லை விஞ்சிய ரூபா 14,047,426 ஆன செலவும், 06 செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 110,307,996 ஆன சேமிப்பும், 07 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 118,221,726 வும், நிலவியமை காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளுராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு**

மீளாய்வாண்டின் இறுதி வரைலும் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமை குழு நிருவப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

2013 ஆண்டின் ரூபா 2,661,725 ஆன செலவில் நிர்மானிக்கப்பட்ட பசுமை ஓய்விடம் 2016 ஆண்டின் போதும் மக்கள் பாவணைக்கு திரக்கப்படாததன் காரணமாக அது பயன்படாத வளமாக காணப்பட்டன.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

கிரயம் ரூபா 53,450,139 ஆன 11 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதும், அவைகளின் உரிமையை சபைக்கு சுவீகரிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.

(இ) வருமான நிருவாகம்.

(ஈ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்.